<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>
<u>அ.வ.எண். 396/2014</u>
<u>நாள். 02.04.2025</u>

2025ம் ஆண்டு ஏப்ரல் 02 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989-ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.M.கனகலிங்கம், உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==========================================================================

| | |
|---|---|
| பெயர் = நிர்மலா | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==========================================================================

**<u>PW3 மு.வி</u>**

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் TYSPL51 அழுந்தலைப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள சரடமங்கலம் கிராமம் புஞ்சை சர்வே எண்.70/5 ல் கட்டுப்பட்ட நிலத்தில் வனிதா என்பவர் வங்கி நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளார். மேற்படி வங்கி நடவடிக்கை பொறுத்து என்னிடம் தீர்மான புத்தகம் உள்ளது. 2013 முதல் 2019 வரை 5 ஆண்டுகளுக்கு வனிதா வங்கியில் பயிர் கடன் வாங்கியுள்ளார். மேற்படி 5 ஆண்டுகள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அசல் ஆவணம் எங்கள் வங்கி நடவடிகைகளுக்கு தேவைப்படுவதால் உண்மை நகல் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் சா.சா.ஆ.2 (எண்ணிக்கை-5) ஆகும். சா.சா.ஆ.2 ஆவணத்தில் அங்கத்தினருக்கு பயிர் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. வனிதா என்பவர் 0.80 ஏர்ஸ்க்கு சாகுபடி செய்ததாக கண்டுள்ளது.

<u>குறுக்குவிசாரணை</u>

1) நான் TYSPL51 அழுந்தலைப்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக எப்போது பொறுப்பேற்றேன் என்றால் 06.04.2023 ஆகும். சா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 2013 முதல் 2019 வரையிலான ஆண்டுகளில் நான் சங்கத்தில் எந்த பொறுப்பிலும் நான் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வாதி வனிதா எனது சங்கத்தில் கடன் பெற்றார் என்பதை பொறுத்தும் வாதி தான் சாகுபடி செய்து வந்தார் என்பதை பொறுத்தும் எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரிதான். எங்களது சங்கத்தில் கடன் பெறும் நபர் சாகுபடி செய்கிறாரா என்று நேரடியாக சென்று பார்க்கும் வழக்கம் இல்லை என்றால் சரிதான். மேற்படி காரணத்தினால் கடன் பெறும் நபர் சாகுபடி செய்கிறாரா என்ற விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதி 80 ஏர்ஸ் அனைத்து ஆண்டுகளிலும் சாகுபடி செய்தார் என்று சா.சா.ஆ.2 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். எங்களது வங்கியில் வாதி வனிதா உறுப்பினராக இருக்கிறார் என்பதை காட்ட சா.சா.ஆ.2 ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் தற்போது இல்லை. சா.சா.ஆ.2 தீர்மானம் எதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்று மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட காலக்கட்டத்தில் இருநத நபரை விசாரணை செய்தால் தான் சா.சா.ஆ.2 பற்றிய உண்மை விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.